# மற்றவர்களுக்கு தமது நற்செய்தியைக் கூறுமாறு இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கூறினார்

### எளிய வார்த்தைகள் மூலம் எவ்வாறு நற்செய்தியை கூறுவது என்று சிறுவர்களுக்கு போதித்தல்

**ஜெபம்:** அன்பான தேவனே, இயேசுவைப் பற்றிய நற் செய்தியை அறிந்து பிறருக்கு கூற பிள்ளைகளுக்கு உதவி செய்யும்.

இந்த பிள்ளைகளுக்கான கல்வி செயல்பாடுகள் எல்லாவற்றையும் அல்லது எதையாவது தெரிந்து கொள்ளவும்.

**லூக்கா. 24:1-8, 36-50** லிருந்து, மரித்தோரில் இருந்து எழுந்த பின் இயேசு எவ்வாறு நற்செய்தியைக் கூறினார் என்ற **கதையை** ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ வாசிக்கவும். நற்செய்தியைப் பிறருக்கு எவ்விதம் சுருக்கமாக, எளிமையாகக் கூறலாம் என்பதை இக்கதை காட்டுகிறது.



கதையைக் கூறிய பின் கேட்கவும்.

- உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்த சீஷர்களை அச்சப்பட வைத்தது எது? *(பதில் வச. 37).*
- தமக்குள்ள சரீரம் மெய்யானதுதான் என்பதை இயேசு அவர்களுக்கு எவ்வாறு காட்டினார்? *(39-43).*
- இயேசுவைப் பற்றிய தீர்க்கத்தரிசனத்தை வேதாகமத்தில் நாம் எங்கு காணலாம்? *(44).*
- இயேசுவுக்கு என்ன நேரிடும் என்று வேத வசனங்கள் கூறின? *(46).*
- எல்லா ஜாதிகளுக்கும் எதை அறிவிக்க வேண்டும் என்று இயேசு கூறினார்? *(47).*
- பரத்தில் இருந்து எதைப் பெற்றுக் கொள்வார்கள் என்று இயேசு தமது சீஷர்களுக்கு ாக்குத்தத்தம் செய்தார்? *(49).*
- இயேசு பரலோகத்துக்கு எழுந்தருளிய பின் சீஷர்கள் என்ன செய்தார்கள்? *(52).*

**பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் நடிக்க வேண்டிய பாத்திரம்.

**கதை கூறுபவர்:** கதை சுருக்கம் கூறி பேச வேண்டியவைகளை சிறுவர்களுக்கு ஞாபகமூட்டுவது.

**இயேசு:** ஒரு மேசை, நாற்காலி, சாப்பிட சில உணவுப் பொருள் ஆகியவற்றை சேகரித்துக் கொள்ளவும்.

**சிறு பிள்ளைகள்** சீஷர்களாக நடிக்கவும்.

நற்செய்தி பற்றிய கதையின் பகுதிகளை **நாடகமாக்குக.**

உங்கள் நேரத்தை இந்த நாடகத்தை தயாரிப்பதில் பிள்ளைகளோடு செலவிடவும். நீங்கள் இதை சுருக்கலாம்.

**நாடகம் பகுதி 1 லூக் 24:36-43.**

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறவும் (வச. 36-43). பின் "சீஷர்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**சீஷர்கள்** : "இயேசு உயிரோடு இருப்பாரா?" "அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தாரா?" "அவரைப் பார்த்ததாகப் பேதுரு சொன்னாரே!" "எம்மா ஊரில் இருந்து வந்த இரு சீஷர்களும் அவரைப் பார்த்ததாகக் கூறினார்கள்" "நான் நம்பவில்லை."

**இயேசு** : உங்களுக்கு சமாதானம்!

**சீஷர்கள்** : (பயந்து அலறுதல்) "ஓ! இல்லை!" "இது ஆவி" "எனக்கு பயமாய் இருக்கிறது."

**இயேசு** : நான் ஆவி அல்ல. என்னைத் தொட்டுப் பாருங்கள். என்னைப் பாருங்கள். சாப்பிட எதையாவது கொடுங்கள். ஆவி எதையும் சாப்பிடாது. ஏனெனில் ஆவிக்கு சரீரம் கிடையாது எனக்கு சரீரம் இருக்கிறது."

**சீஷர்கள்** : (இயேசுவுக்கு சாப்பிட எதையோ கொடுத்து) "இதோ பாருங்கள். அவர் மீன் சாப்பிடுகிறார். அவர் ஆவியாக இருக்க முடியாது!"

**நாடகம், பகுதி 2, லூக். 24:44-53**

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும் (வச. 44-53). "இயேசு கூறுவதைக் கேளுங்கள்."

**இயேசு** : "ஏன், ஆச்சரியப்படுகிறீர்கள்?" இது எனக்கு நேரிடும் என்று வேதாகமம் உங்களுக்கு சொன்னது அல்லவா? நான் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழ வேண்டியதாய் இருந்தது.

**சீஷர்கள்** : "எவ்வளவு அற்புதமானது! நாங்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லையே!"

**இயேசு** : "இப்போது எல்லா தேசங்களிலும் உள்ள மக்களுக்கு (மனம் திரும்புதலையும்) என்னுடைய நாமத்திலே பாவமன்னிப்பையும் நீங்கள் அறிவிக்க வேண்டும். ஆனாலும் என் பிதா தமது ஆவியை அனுப்பும் வரை காத்திருங்கள். அதனால் நீங்கள் அவருடைய வல்லமையான சாட்சிகளாய் விளங்க முடியும். வாருங்கள் நாம் போவோம்."

**எல்லோரும்** : இணைந்து கொஞ்ச நேரம் போகின்றனர்.

**இயேசு** : கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்து பரலோகம் போகிறார் (ஒரு மேசை, நாற்காலி மீது ஏறவும்).

**சீஷர்கள்** : (தரையில் முழங்கால் ஊன்றி ஒரு துதிப்பாடலை தேவனுக்குப் பாடுகின்றனர். பின் எழுந்து கூறுகின்றனர்) "இயேசுவே கர்த்தர்!" "அவரைத் துதித்து முழு இருதயத்தோடும் அவருக்கு சேவை செய்வோம்" "அவரைப் பற்றி எல்லோருக்கும் கூறுவோம்."

**கதை கூறுபவர் அல்லது பெரிய பிள்ளை:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி சொல்லுதல். கேட்டுக் கொண்டிருந்த பெரியவர்களுக்கும் நன்றி கூறவும்.

சபைத்தலைவரோடு பேசி பிள்ளைகள் செய்ய வேண்டியவைகளை ஏற்பாடு செய்யவும்.


ஆராதனை வேளையில் பெரியவர்களுக்காக நாடகத்தை நடித்தல்.

இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளை பெரியவர்களிடம் கேட்கவும்.

அவர்கள் ஆயத்தம் செய்த கவிதை, படங்கள் ஆகிய எதையும் வழங்கட்டும்.

நற்செய்தியை எளிய வார்த்தைகளில் கூறுவதற்கு உதாரணங்களை கூறுமாறு பிள்ளைகளைக் கேட்கலாம். (புகை வண்டியில், நண்பர் வீட்டில் போன்றவை) மக்கள் உதாரணங்களைத் தரட்டும்.

பிள்ளைகள் பார்த்து வரையும்படி ஒரு சிலுவையின் படத்தை வரைக.



- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும்
- படத்தை ஆராதனை வேளையில் பெரியவர்களுக்கு காட்டி அது இயேசுவின் பாடுமரணத்தை குறிப்பதாக விளக்கவும்.
- மூன்று பகுதிகளில் அவர்கள் **நற்செய்தியை கூறட்டும்.**

1. நமது பாவங்களுக்காக இயேசு தண்டிக்கப்பட்டார், மரித்தார்.
2. அவர் மரித்தோரிடத்தில் இருந்து எழுந்து என்றென்றும் வாழ்கிறார்.
3. தேவன் நமது பாவத்தை மன்னித்து நமக்கு புதிய வாழ்க்கையைத் தருகிறார்.

**மனன வசனம்: லூக் 24:46-49** ல் உள்ள நற்செய்தி. சிறு பிள்ளைகள் 46 ஐ மட்டும் படித்தால் போதுமானது.

**சங்கீதம்:** சங். 13:3,4,5 ஆகிய வசனங்களை மூன்று சிறுவர்கள் ஆளுக்கு ஒன்றாக ஒப்புவிக்கட்டும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தராகிய இயேசுவே, வேதம் முன் கூறிய பிரகாரமே நீர் எங்களுக்காக பாடுபட்டு மரித்தீர். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தீர். மனம்திரும்பி உமது நாமத்திலே பாவ மன்னிப்பை பெற வகை செய்தீர். உமது வல்லமையோடு பிறருக்கு நற்செய்தியைக் கூற நீர் எங்களுக்கு உமது ஆவியை அனுப்பினீர். நீர் எங்களை மகிழ்ச்சியால் நிரப்புகிறீர்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net